உறுப்பினருரிமைக்கான நிபந்தனைகள்

உறுப்புரிமை நிபந்தனைகள்

- நூலகத்தில் இணைந்துகொள்வதற்கு உங்களுடைய பெயர் மற்றும் தற்போதைய விலாசம் குறித்தான சான்றினை வழங்கவும். விலாசத்திற்கான சான்று இல்லாத விண்ணப்பங்கள், பொறுப்பிலுள்ள நூலகரின் தீர்மானத்தின் பிரகாரம், விலக்களிக்கப்படலாம்.
- 16 வயதிற்குட்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் உத்தரவாதம் வழங்குவதற்கு ஒப்பமிடுமாறு வேண்டப்படுகின்றனர். உத்தரவாதிகள், தாங்கள் ஒப்பமிட்ட ஒரு உறுப்பினர் அட்டையினை உபயோகித்து இரவலாகப் பெற்றுக் கொண்ட அனைத்து நூல்களுக்கும் பொறுப்புடையவராவார் என்பதோடு, குறித்த உறுப்பினர் மூலம் ஏற்படக்கூடிய அனைத்துக் கட்டணங்கள் மற்றும் செலவுகளைச் செலுத்துவதற்கும் பொறுப்புடையவராவார்.
- நூல்களை இரவலாகப் பெறுவதற்கும் உங்களது கணக்குப் பற்றிய ஏதேனும் தகவல்களைப் பரீட்சிப்பதற்கும் உங்களது நூலக அட்டையினைக் காண்பிக்கவும். உங்களது நூலக அட்டையினை நீங்கள் கொண்டிருக்காதவிடத்து, நீங்கள் உங்களது பெயர் மற்றும் விலாசத்திற்கான சான்றினை கண்டிப்பாகக் காண்பிக்க வேண்டும்.
- உங்களது பெயர் மற்றும் விலாசத்தில் மாற்றம் ஏற்படின் அது பற்றித் தெரிவிக்கவும்.
- உங்களது நூலக அட்டையினை உபயோகித்து இரவலாகப் பெற்றுக்கொண்ட பொருள்வகை தொலைந்தால் அல்லது அவை சேதமடைந்தால் அதற்கானதொரு மாற்றீட்டுக் கட்டணத்தினைச் செலுத்தவும். இந்த மாற்றீட்டுக் கட்டணமானது குறித்த பொருள்வகைக்கான செலவு மற்றும் ஒரு மீளளிக்கப்பட முடியாத செயலாக்கக் கட்டணம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- உங்களது நூலக அட்டை தொலைந்தால் அல்லது திருடப்பட்டால், அது பற்றி எங்களிடம் தெரிவிக்கவும். ஒரு தொலைந்த நூலக அட்டைக்காக நீங்கள் கண்டிப்பாக ஒரு கட்டணம் செலுத்த வேண்டும்.
- நீங்கள் ஒரு நூலக அட்டையினை மாத்திரமே வைத்திருக்க முடியும்.
- உங்களது நூலக அட்டையினை உபயோகித்துப் பெற்றுக்கொண்ட அனைத்துப் பொருள்வகைகளுக்கும் நீங்களே பொறுப்பாவீர்கள்.
- மற்றுமொரு நூலக உறுப்பினர் முன்பதிவுசெய்து ஒதுக்கிக் கொள்ளாதவிடத்து, நீங்கள் உங்களது கடன்களை இரு முறை புதுப்பிக்கலாம். நீங்கள் சமுகமளித்தோ, தொலைபேசி மூலமோ அல்லது நிகழ்நிலை ஊடாகவோ புதுப்பிக்கலாம்.
- நீங்கள் இரவல் பெற விரும்புகின்ற பொருள்வகையில் ஏதேனும் சேதமேற்பட்டிருப்பதாக நீங்கள் அறிந்தால், நீங்கள் அவற்றை எடுத்துச்செல்லும் முன்னர் அது பற்றி எங்களிடம் தெரிவிக்கவும்.

நூலகத்தில் பேணவேண்டிய நடத்தை

- சபையானது, எமது வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் சௌகரியமான சூழலை வழங்குவதற்கு உறுதி செய்துள்ளது.
- சபையானது பின்வரும் நடத்தைகள் தவிர்க்கப்பட வேண்டுமெனக் கருதுகிறது.
  - தொந்தரவு செய்தல், வலிந்து சண்டைக்குச் செல்லல் அல்லது தகாத வார்த்தைப் பிரயோகம் என்பன போன்ற பண்பற்ற நடத்தை.
  - ஏனைய நபருக்கு ஒரு தொல்லையினை, ஆபத்தினை உருவாக்கும் தன்மையில் செயற்படல், அல்லது வேறு எந்தவொரு நபரின் நூலக உபயோகம் மற்றும் பயன்பாட்டிற்கு தடங்கலாக இருத்தல்.
  - ஒரு அறிவித்தல் சைகைக்கு முரணான தன்மையில் செயற்படல், அல்லது பொறுப்பிலுள்ள நூலகரின் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் சட்டப் பணிப்புரைக்கு முரணாகச் செயற்படல்.
  - நூலகத்தின் ஆதனங்களை அழித்தல் அல்லது அவற்றுக்குச் சேதம் விளைவித்தல் உள்ளடங்கலாக நூலகத்தின் வளங்களை துஷ்பிரயோகம் செய்தல், அத்துடன் கணினி மற்றும் இணையம் / வைபை (**WiFi**) குறித்தான உபயோக நிபந்தனைகளுக்கு இணங்காமை.

- சிட்டி ஒப் மொனாஷ் உள்ளூர் சட்ட இல. 3 இன் பிரகாரம், நூலகத்தினுள் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் நடந்து கொள்கின்ற மக்களை கட்டடத்தை விட்டும் வெளியேறுமாறு வேண்டுவதற்கான உரிமை நூலக பணியாளர்களுக்கு உண்டு.
- நூலகத்திற்குச் சமுகமளிப்போர் சபையுடன், அரசுடன் அல்லது கூட்டாட்சி அரசாங்க சுகாதார தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களுடன் இசைவுறுமாறு வேண்டப்படுகின்றனர்.
- நூலகத்தில் தொடர்ந்தும் ஒரு ஏற்றுக்கொள்ள முடியாத தன்மையில் நடந்துகொள்பவர்கள், அத்தகைய நடத்தையின் தன்மை மற்றும் சூழ்நிலைகள் என்பவற்றின் பிரகாரம், குறித்த சில நூலக வசதிகளைப் பெறுவதற்கு மறுக்கப்படலாம் அல்லது ஒரு குறித்த காலப் பகுதிக்கு நூலகத்திற்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படலாம்.
- 11 வயதிற்கும் குறைவான சிறுவர்கள் ஒரு பொறுப்பான வயதுவந்த நபரினால் கண்டிப்பாக கண்காணிக்கப்படல் வேண்டும்.
- இணைய வசதியை உபயோகிக்கின்ற மக்கள் கணினி மற்றும் இணையம் / வைபை (**WiFi**) உபயோக நிபந்தனைகளை கண்டிப்பாக ஏற்று அவற்றுக்கு இசைவுறுதல் வேண்டும்.

தனியுரிமை

*சபையானது உங்களது பிரத்தியேகத் தகவல்களை குறித்த நூலக சேவைகளை உங்களுக்கு வழங்கும் நோக்கத்திற்காக மாத்திரமே உபயோகிக்கின்றது. சட்டத்தினால் வேண்டப்பட்டாலொழிய அல்லது அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அல்லது தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்புச் சட்டம் 2014 இற்கு இணங்கினாலொழிய, உங்களது பிரத்தியேகத் தகவல்கள் உங்களது சம்மதம் இன்றி எந்தவொரு வெளித்தரப்பினருக்கும் வழங்கப்படமாட்டாது. சபையானது பிரத்தியேகத் தகவல்களைப் பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பொருந்திக் கொண்டுள்ளது. இது பற்றிய விபரங்களை சபையின் இணையத்தளமாகிய* ***www.monash.vic.gov.au/legal/privacy*** *இல் பெற்றுக்கொள்ளலாம்.*

## கணினி மற்றும் இணையம் / வைபை (WiFi) பற்றிய உபயோக நிபந்தனைகள்

- கணினியை உபயோகின்ற நூலகத்தின் செல்லுபடியான உறுப்பினர்கள் கண்டிப்பாக தமது நூலக அட்டையின் இலக்கத்தினை உபயோகித்து கணினியில் புகுபதிகை செய்ய வேண்டும். விக்டோரியாவுக்கு சமுகமளிப்போர் தமது அடையாளத்தினை வழங்குமிடத்து கணினி அணுகலுக்கான ஒரு வருகையாளர் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- 16 வயதுக்குக் கீழான பயனர்களுக்கான உத்தரவாதிகளாக பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் தம்மைப் பதிவுசெய்தல் வேண்டும். நூலகத்தின் இணைய மற்றும் தொழில்நுட்ப வசதிகளை தமது பிள்ளைகள் அணுகுவதை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பானது பெற்றோர் அல்லது பாதுகாவலரைச் சார்ந்ததாகும்.
- நூலகத்தின் கணினியை ஒரு தடவையில் இருவருக்கு மேல் உபயோகிக்க முடியாது.
- பயனர்கள் தமது உபயோகக் காலத்தினுள் அணுகல், பரிமாற்றம், காட்சி, அச்செடுத்தல் மற்றும் சேமித்தல் போன்றன உள்ளிட்ட இணைய இயக்கத்திற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.
- பயனர்கள் அரச மற்றும் கூட்டாட்சிச் சட்டங்கள் மற்றும் உள்நாட்டுச் சட்டம் இல. 3 போன்ற அனைத்துச் சட்டங்களுக்கும் இணக்கமுறுமாறு வேண்டப்படுகின்றனர்.
- வெறுப்பூட்டுகின்ற அல்லது சட்டவிரோதமாகக் கருதப்படக் கூடிய விடயங்களை தரவிறக்கம் செய்தல் மற்றும் / அல்லது பார்த்தல் வெளிப்படையாக தடைசெய்யப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ள முடியாத இணைய உபயோகமானது வரையறை இன்றி, பின்வருவனவற்றையும் கொண்டுள்ளது:
    - நூலகத்திற்குச் சொந்தமான சாதனம், மென்பாகம் அல்லது தரவு போன்றவற்றை அழித்தல் அல்லது அவற்றுக்குச் சேதம் விளைவித்தல்.
    - பொதுவாக பாலியல் ரீதியில் வெளிப்படையானதாகக் கருதப்படும் படங்கள் உள்ளிட்ட விடயங்களைப் பார்த்தல்.

- பதிப்புரிமையுடைய விடயங்களை வேண்டுமென்றே சட்டவிரோதமாக பிரதியெடுத்தல் அல்லது உரிமம் பற்றிய உடன்படிக்கை மற்றும் ஏனைய ஒப்பந்தங்களை மீறுதல்.
- ஏதேனும் கணினி வலையமைப்பு முறைமைப் பாதுகாப்பினை மீறுதல் அல்லது மீறுவதற்கு முற்படல்.
- குறித்த தகவல் வளங்களின் வடிவமைப்பாளர்கள், பதிப்பாசிரியர், பயனர்கள் அல்லது சம்பந்தப்படுவோர் போன்ற நபர்கள் அல்லது நிறுவனங்களின் தனியுரிமையினை மீறுதல்.
- இலத்திரனியல் தொடர்பாடல்களை அனுமதியின்றி கண்காணித்தல்.
- மின் அஞ்சல் குப்பை **(spamming)** போன்ற மின்னஞ்சல் சேவையினை பொருத்தமற்ற முறையில் உபயோகித்தல்.
- மொனாஷ் சபையின் பதிலளிப்புமிக்க சூதாட்ட உபாயத்தின் பிரகார சூதாட்டத் தளங்கள்.

- நூலகமானது குறித்த சில செயலாக்கங்கள், கோப்பு வகை மற்றும் தரவிறக்கத் தளங்களை அணுகுவதை மட்டுப்படுத்துவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.
- அச்செடுத்தல் செலவுகளின் பிரகாரம் அனைத்து அச்செடுத்தல்களுக்கான செலவுகளுக்கும் கணினி பயனர் பொறுப்பாவார்.
- இந்த நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற பட்சத்தில் கணினி மற்றும் இணைய சலுகைகள் இடைநிறுத்தப்படும்.
- நூலகத்தின் இணைய வளங்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்தும் நடவடிக்கையானது உள்நாட்டு, அரச அல்லது கூட்டாட்சி அதிகாரசபைகளினால் வழக்குத் தொடரப்பட வழியமைக்கலாம்.
- நூலக ஊழியர்களின் விருப்புரிமையின் பிரகாரம் ஒரு அமர்வினை நிறுவத்துவதற்கான உரிமையினை நூலகம் கொண்டுள்ளது.
- மொனாஷ் சபையானது அதன் கணினி வலையமைப்பினூடாக பரிமாற்றப்படுகின்ற அனைத்து விடயங்களையும் கண்காணிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.